ரூ.3 கோடியே 45 லட்சத்தில் கட்டப்படும்

# ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடம்!

## அமைச்சர் இ.பெரியசாமி நேரில் ஆய்வு!

ஆத்தூர், ஜூலை 3 -

ஆத்தூர் - செம்பட்டியில் ரூ.3 கோடியே 45 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்படும் ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடப்பணிகளை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறை, மன்ற கூட்டம் நடைபெறும் அறைகளை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் நிலக்கோட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட செம்பட்டியில் உள்ளது கடந்த 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடத்தில் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் சென்றுவர சிரமப்பட்டு வந்தனர். முறையாக பொறியாளர் அலுவலகம் மற்றும் சிமெண்ட் குடோன் அமைக்க சரிவர இடவசதி இல்லாமல் இருந்து வந்தது. ஆத்தூர் தொகுதியின் ஆத்தூர் ஒன்றிய அலுவலக கட்டிடம் நிலக்கோட்டை ஒன்றியத்தில் செயல்பட்டு வந்ததை மாற்றும் வகையிலும் நவீன வசதியுடன் புதிய கட்டிடம் கட்டுவதற்கு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி எடுத்த நடவடிக்கை யின் பயனாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் ஆத்தூர் தொகுதிக்கு உட்பட்ட ஆத்தூர் பிரிவில் ரூ.3 கோடியே 45லட்சம் மதிப்பில் நவீன வசதியுடன் மீட்டிங் ஹாலுடன் கட்டப்பட்டு வருகிறது. நேற்று அதிரடியாக கட்டிடப்பணிகளை பார்வையிட வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கட்டிடத்தின் நுழைவு வாயில் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறை ஒன்றியகுழு கூட்டம் நடைபெறும் அறைகளை பார்வையிட்டு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

ஆய்வின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஆத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், கிழக்கு ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

பொன்.முத்தையா பாண்டியன் தலைமையில்

# வாசுதேவநல்லூரில் பொதுக்கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி - ராஜா எம்.எல்.ஏ. - தனுஷ் எம்.குமார் எம்.பி. சிறப்புரை!

தென்காசி, ஜூலை 3 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சிவகிரி பேரூர் கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் இன்று 3ம் தேதி திங்கள் கிழமை மாலை 6 மணி அளவில் சிவகிரி காந்தி கலையரங்கத்தில் வைத்து வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பொன். முத்தையா பாண்டியன் தலைமையில் மாவட்ட கழக துணை செயலாளர் மனோகரன், ராயகிரி பேரூர் செயலாளர் கே.டி.சி குருசாமி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மருதப்பன், சிவகிரி பேரூராட்சி மன்ற தலைவர் கோமதி சங்கரி சுந்தர வடிவேலு ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர்.செண்பகவிநாயகம் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம். எல்.ஏ.தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம் குமார் எம்.பி. ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு,சீனிவாசன், பரமகுரு,கழக தீர்மானக் குழு உறுப்பினர் சரவணன், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துசெல்வி, மாவட்ட அவைதலைவர் பத்மநாதன், துணை செயலாளர்கள் ராஜதுரை, புனிதா, பொருளாளர் சரவணன் பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமி பாண்டியன், சாகுல்ஹமீது வெள்ளத்துரை, மாரிச்சாமி, தேவதாஸ், பராசக்தி, மகேஸ்வரி, பி.மாரிசாமி உள்பட ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், வாசு ஒன்றிய நிர்வாகிகள், சிவகிரி பேரூராட்சி உறுப்பினர்கள், சிவகிரி பேரூர் கழக வார்டு செயலாளர்கள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் கார்த்திக் நன்றி உரையாற்றுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினையொட்டி - கோவை

# கவுண்டம்பாளையம் அண்ணா நகரில் மரக்கன்றுகள் நடும் விழா!

## மரக்கன்றுகள் நலச்சங்கங்கள் சார்பில் நடப்பட்டன!

கோவை, ஜூலை 3-

கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதியில் அமைந்துள்ள அண்ணாநகரில், இன்றைய தினம் , தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டினை ஒட்டி ஓய்வறியா சூரியன், எழுச்சி மிக்க கழகத் தலைவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அன்பு கட்டளைக்கிணங்க,, தொடர்ந்து 13 வது வாரமாக, மரம் நடு விழா அண்ணாநகரில் உள்ள தண்ணீர் மேல்நிலை தொட்டி அருகில், மரக்கன்றுகள் நலச் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக நடப்பட்டன.

அனைத்து நலச் சங்கங்களின் நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள், அரிமா சங்கத்தினர், ரோட்டரி சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் நல சங்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரும், 35-ஆவது வட்டக் கழக அவைத் தலைவர் சோ. துரைப்பாண்டியன் ஏற்பாட்டில், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளரும் கோவை மாநகராட்சியின் கல்வி பூங்கா விளையாட்டு மைதானங்களின் குழு தலைவரும் மாமன்ற உறுப்பினருமான திருமதி மாலதி தலைமையில், அனைத்து வகை மரக்கன்றுகளும் நடப்பட்டன..

இந்நிகழ்வில் மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவையின் துணை அமைப்பாளரும், மூத்த முன்னோடியுமான கா.பொன்னரசு மற்றும் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளரும் வட்டக் கழக பி எல் ஏ 2 ஆற்றல்மிகு ஆலிஸ் பிரசன்னா, காவல் துணை ஆய்வாளர்( ஓய்வு) மதிவாணன் ஆகியோர் முன்னிலையில், மகளிர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் உமா சங்கரி, வர்த்தக அணி அரிமா குமரேசன் , தொண்டரணி மோகன்குமார், வர்த்தக அணி ராம்குமார், இளைஞர் அணி விக்னேஷ், வர்த்தக அணி ரவி முரசு, ஐடி விங் இ சேவை மையம் மோகன்ராஜ், ஆட்டோ நகர் மூத்த முன்னோடி வீரப்பன், மார்க்கெட் தயானந்தன், அரிமா சந்திரலிங்கம், முன்னாள் வட்டக் கழக பிரதிநிதி குமார் , அன்பு நகர் அக்ரி ஆபிசர் குமரன், விவசாய கல்லூரியின் முன்னாள் டீன் இளமுருகு, சிவா டிஸ்டிலரீஸ் ராஜேந்திரன், இளைஞர் அணி சஞ்சய், ரமேஷ், மகளிர் அணி பஞ்சு, லீலா, பிரியங்கா கழக மூத்த முன்னோடிகள் மாணிக்கராஜ், லிங்கம், வரதராஜ், மாணவர் அணி கால்வின், ஐடி விங் கார்லின், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை, அடையாறு மண்டலம், அரங்கநாதன் சுரங்கப்பாதை அருகில், வீட்டின் உரிமையாளர் ஒருவர் காவிரி நகர் 70 அடி சாலை நடைபாதையில் ஆழ்துளைக் கிணறு அமைத்த இடத்தினை, கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், நேற்று (02.07.2023) பார்வையிட்டு வீட்டின் உரிமையாளர் மற்றும் போர்வெல் காண்டிராக்டர் மீது அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுரையின்படி காவல்துறையின் வாயிலாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ள செயற்பொறியாளர் ஆர்.புருசோத்தமனிடம் அறிவுறுத்தினார்.

செங்கல்பட்டில் நாளை மாலை நடைபெறுகிறது

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நாளை (04.07.2023 - செவ்வாய்க் கிழமை) மாலை 6.00 மணியளவில் செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை எதிரில் அமைந்துள்ள ரகமத் மகால் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக வளர்ச்சி

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

